**தமிழ்நாடு அரசு**

சுருக்கம்

பொதுப் பணிகள் – ஒப்புதல் பெற்ற பதவி உயர்வுக்கான பெயர் பட்டியல் – தள்ளி வைக்கப்பட்ட நேர்வுகள் – பட்டியலில் மீளச்சேர்த்தல் – ஊதிய நிர்ணயம் செய்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (எஸ்) துறை

அரசு ஆணை (நிலை) எண். 203 நாள் : 30.10.2000

படிக்க :

1. அரசு ஆணை நிலை எண். 985, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (பணி.எம்) துறை, நாள் 19.9.81.
2. அரசு கடித எண். 44445/பணி–எம்/82–1, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, நாள் 8.6.82.
3. அரசு ஆணை நிலை எண். 977, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (அவி–3) துறை, நாள் 6.10.86.
4. அரசு ஆணை நிலை எண். 368, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (எஸ்) துறை, நாள் 18.10.93.

-----

ஆணை :

உயர் பதவிக்கான தேர்ந்தோர் பெயர் பட்டியல் தயாரிக்கும்பொழுது, அப்பட்டியலில் சேர்க்காமல் தள்ளி வைக்கப்பட்டவர்களின் பெயர்கள், முறையீடு/மேல் முறையீடு/அரசின் பரிசீலனைக்குப் பின்னர் பட்டியலில் முதுநிலையின் அடிப்படையில் சேர்க்கப்பட்டு உயர் பதவியில் பணியமர்த்தப்படுபவர்களுக்கு அவர்களைவிடப் பணியில் இளையோர்கள் பதவி உயர்வு பெற்ற நாளை அடிப்படையாகக் கொண்டு அவ்வுயர் பதவியில் அடிப்படை விதி 27–ன் விதி முறைமை (17)–ன் கீழ் அவர்கள் உயர் பதவியில் பதவி ஏற்ற நாளிலிருந்து ஊதியம் நிர்ணயம் செய்யப்படுகிறது. அதற்குரிய பணப்பயன் அந்நாளிலிருந்தே வழங்கப்படுகிறது.

2. சில நேர்வுகளில் முறையீடு/மேல் முறையீடு/அரசின் பரிசீலனைக்குப் பின்னர், முந்தைய பட்டியலில் பெயர் சேர்க்கப்பட்டு பதவி உயர்வு அளிக்கப்படு முன்னரே அரசு ஊழியர் வயது முதிர்வின் காரணமாக பணியிலிருந்து ஓய்வு பெற்றுவிட்டாலோ அல்லது பணியிலிருக்கும்பொழுது/பணியிலிருந்து ஓய்வு பெற்ற பின்னர் மரணமடைந்து விட்டாலோ அத்தகைய நேர்வுகளில் முந்தைய பெயர் பட்டியலில், தகுதி மற்றும் முதுநிலையின் அடிப்படையில் அவர்களது பெயர்கள் சேர்க்கப்பட்ட போதிலும், உயர் பதவியில் பணியேற்க முடியாமல் போய்விடுகிறது. அத்தகையோருக்கு அடிப்படை விதி 27–ன் விதி முறைமை (17)–ன் கீழ் ஊதியம் நிர்ணயித்து பணப்பயன் வழங்க இயலாது.